வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper
உதயன்
விலை ரூ. 50
சுடர் : 38
கதிர் : 69
03 வெள்ளிக்கிழமை பெப்ரவரி 2023
தை 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054
பக்கங்கள் 12

# கரிநாள் பேரணியின் வழித்தடம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் கறுப்பு நாள் பேரணியின் வழித்தடம் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தப் பேரணியானது, பெப்ரவரி 4ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி நாச்சிமார் கோவிலடியூடாக பிரதான தபால் அலுவலகம், 11 >

# பெப்ரவரி 4 ஹர்த்தால்!

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 3**

**சிறிலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை ஹர்த்தலாக அறிவித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், இந்த ஹர்த்தால் போராட்டம் வெற்றிபெற உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கையையும் விடுத்துள்ளது.** 11 >

# அச்சுவேலியில் அதிக மழை!

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலையிலிருந்து நேற்றுக் காலை வரையில் பரவலாக மழை வீழ்ச்சி பதிவான நிலையில், அச்சுவேலியிலேயே ஆகக்கூடுதலான மழை கிடைத்துள்ளதாக அறிக்கை 11 >

# வடக்கில் பரவலாக நேற்றுக் கடும்மழை

யாழ்ப்பாணம், பெப். 3
வடமாகாணத்தில் நேற்று முன்தினம் பின்னிரவு முதல் கனமழை கொட்டித் தீர்த்து வருகின்றது. இந்தக் கால நிலை நாளை சனிக்கிழமை வரை தொடரும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்தக் கடும் மழை காரணமாவும் காற்றின் வேகத்தாலும் வட மாகாண மக்கள் மிகுந்த 10 >

# எகிறுகின்றது எரிவாயு விலை!

கொழும்பு, பெப். 3
12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 350 முதல் 400 ரூபா வரை அதிகரிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவன வட்டாரங்கள் தெரி 11 >

# சிங்களதேசத்தின் சுதந்திர நாள் அது தமிழர் தேசத்தின் கரிநாள்

## தேசமாக எழுவோம்: அலையெனத் திரள்வோம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிக்கை

கொழும்பு, பெப். 3
தமிழர்களின் இறைமையைப் பறித்துள்ள சிங்களப் பேரினவாத அரசானது, தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்துள்ள நிலையில், சிங்கள தேசத்தின் சுதந்திர நாள் என் 10 >

# சுமந்திரன், தவராஜா மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## மாவை சேனாதிராசா சீற்றம்

யாழ்ப்பாணம், பெப். 3
கட்சிகளுக்குள் பிளவு ஏற்படுத்தும் முகமாகச் செயற்பட்ட தமிழரசு கட்சியில் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் எதிர்வரும் 11, 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று 11 >

அரச நிறுவனங்களில்

# கடனடிப்படையில் இனிமேல் பொருள்கள், சேவைக்கு தடை!

## *தேர்தல்கள் ஆணைக்குழுவை முடக்குகின்றாரா ஜனாதிபதி?*

யாழ்ப்பாணம், பெப். 3
தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச நிறுவனங்கள் கடன் அடிப்படையில் பொருள்கள் மற்றும் சேவைகளை கொள்வனவுசெய்யக் கூடாது எனவும், உத்தரவை மீறும் அரச அதிகாரிகளே அது தொடர் 11 >

மார்ச் 10ஆம் திகதியன்று

# ஜனாதிபதிக் கதிரையில் ரணிலால் அமரமுடியாது

**ஜே.வி.பி. வியூகம்**

கொழும்பு, பெப். 3
'மார்ச் 10ஆம் திகதியன்று ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதிக் கதிரையில் அமர முடியாது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் ஊடாக அதை நாம் நிரூபித்துக் காட்டுவோம்' - இவ்வாறு ஜே.வி. பியின் சிரேஷ்ட உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். 11 >

# இனத்தை விற்பது யார்? தற்போது இதுவே போட்டி

## தமிழ்த் தேசியக் கட்சிகளை நேற்று கடுமையாகச் சாடிய கஜேந்திரகுமார்



கொழும்பு, பெப். 3
கொள்கை என்ற பெயரில் இந்தியாவுக்கு விசுவாசமாக நின்று இனத்தை விற்பதே தமிழ்க் கட்சிகளிடையேயான போட்டி -இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன் 10 >


# 13 வேண்டாம்!

## முதன்மைப் பௌத்த பீடங்கள் ரணிலிடம் நேரில் வலியுறுத்து

10 >

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜனாதிபதி, பிரதமருக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரம்

யாழ்ப்பாணம், ஜன.3

2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரங்களை டெய்லி மிரர் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு 3.04 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறை கொடுப்பனவு என்பவற்றுக்காக 70 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு பிரயாணங்களுக்கென 26 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு செலவுகளுக்கென 450 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு 1.4 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 3.88 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறை கொடுப்பனவு என்பவற்றுக்காக 70 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு பிரயாணங்களுக்கென 86 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு செலவுகளுக்கென 450 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு 1.1 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறை கொடுப்பனவு என்பவற்றுக்காக 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு பயணங்களுக்கென 18 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு செலவுகளுக்கென 172 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றை விட அமைச்சர்களுக்கு 2022 ஆம் ஆண்டு 217 மில்லியன் ரூபாவும் 2023ஆம் ஆண்டு 263 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

இலங்கையில்

# 23 லட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவை

## 'யுனிசெப்' அமைப்பு தகவல்

கொழும்பு, பெப். 3

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இலங்கையில் 70 லட்சம் பேருக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது. அதில் 23 லட்சம் சிறுவர்கள் உள்ளடங்குகின்றனர் என்று 'யுனிசெப்' அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் 'யுனிசெப்' அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிறுவர்களின் ஊட்டச்சத்து குறைப்பாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக இலங்கையில் 10 இல் 7 குடும்பங்கள் தாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்துள்ளது.

சிறுவர்களுக்கான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்றவை அத்தியாவசிய சேவைகள், மருந்துப் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை, நீண்ட மின்வெட்டு ஆகியவற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

23 லட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது. 5 வயதுக்கு உட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள 56 ஆயிரம் குழந்தைகளுக்கு அவசர உதவிகள் தேவைப்படுகின்றன.

அத்துடன் 4.8 மில்லியன் சிறுவர்களுக்கு தடையில்லாத கல்வி கிடைக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் அமைப்பான 'யுனிசெப்' மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## தொடர் மழை வேளையில் கராஜ், கோயிலில் திருட்டு

சாவகச்சேரி, பெப். 3

தொடர்மழை வேளையில் சாவகச்சேரி பகுதியிலுள்ள கோயிலில் நகை மற்றும் பணமும் கோயிலுக்கு அருகிலுள்ள கராஜ் நிலையத்தில் பெருமளவு பணமும் திருடப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 11 மணியளவில் பெரும் மழை பெய்து கொண்டிருந்த வேளை கோயில் கதவை உடைத்து நுழைந்த திருடர்கள், நகை மற்றும் உண்டியல் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

கோயிலுக்கு அருகிலுள்ள கராஜ் நிலையத்திலும் பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

முறைப்பாட்டுக்கமைய கராஜில் தங்கியிருந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கராஜ் கூரைத் தகரத்தில் மழை பெய்த சத்தம் அதிகமாகக் காணப்பட்டதால் கோயில் கதவு உடைத்த சத்தம் தமக்குக் கேட்கவில்லை என்று தெரிவித்தனர். (ஒ-14.9)

## ஐ.நா. சபை பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் பற்றுறுதி

### சத்தியம் செய்கிறது இலங்கை

கொழும்பு, பெப்.3

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உலகளாவிய மதிப்பீடு தொடர்பான குழுவால் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மீளாய்வைத் தொடர்ந்து, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள், கொரோனா வைரஸ் பரவல், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு இலங்கை முகங்கொடுத்திருந்தபோதும், மீளாய்வின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட 177 பரிந்துரைகளையும், சுயமாக மேற்கொள்ளப்பட்ட 12 தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் உலகளாவிய கால மதிப்பீடு தொடர்பான குழு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீளாய்வை மேற்கொண்டது.

இந்த மீளாய்வுக்கென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கை தொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தது. மனித உரிமைகள் விவகாரத்தில் அதன் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கையிடமிருந்தும் அறிக்கை கோரப்பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட சில முக்கிய மான விடயங்களை உள்ளடக்கி யதாக 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய திருத்தங்கள் அடங்கிய ஆவணம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் தொடர்பான சட்ட நிறைவேற்றம், காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் உருவாக்கம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் உள்ளிட்ட முக்கியமான சர்வதேச பிரகடனங்கள் மற்றும் சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுவதற்கான இணக்கம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் வலுவாக்கம் உள்ளிட்ட பல்வேறு நகர்வுகள் இலங்கையால் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனா பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு மத்தியிலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் இலங்கை வலுவான முன்னேற்றத்தைப் பதிவுசெய்தது. அதன்படி 163 நாடுகளில் 70.0 என்ற புள்ளியுடன் இலங்கை 76 ஆவது இடத்தைப்பிடித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் உபகட்டமைப்புக்கள் மற்றும் முகவரமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதை முன்னிறுத்தியும் காலநிலைமாற்ற சவால்களை திறம்பட எதிர்கொள்வதை இலக்காகக்கொண்டும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன - என்றுள்ளது. (எ-இ)

தலைநகர் கொழும்பில்

## சுதந்திர நாளில் பெரும் போராட்டம்

### அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

கொழும்பு, பெப். 3

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினமான நாளைய தினம் கொழும்பில் மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைகளைக் கண்டித்தும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்தது.

இதேவேளை இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கு- கிழக்கு நீதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் தாயக மக்கள் கிளர்ந்தெழவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போதனா மருத்துவமனையில்

## குருதிக்கு தட்டுப்பாடு



யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்கமுடியாதுள்ளது என்று மருத்துவமனை குருதிப்பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குருதிக்கொடை முகாம் நாளை நடைபெறவுள்ளது. எனினும் அதுவரை நோயாளர்களுக்கு வழங்குவதற்குப் போதியளவு குருதி கையிருப்பில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குருதிக் கொடை வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியான குருதிக் கொடையாளர்களும், புதிதாக குருதிக் கொடை வழங்கக் கூடிய கொடையாளர்களும் தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பின்புறத்தில் அமைந்துள்ள 12 ஆம் இலக்க நுழைவாயிலின் ஊடாக மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவுக்கு நேரடியாக வருகை தந்து குருதிக்கொடை செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் மேலதிக தகவல்களுக்கு 0772105375 எனும் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-14,66)

# தொடர் மழையால் அறுவடை பாதிப்பு

## விவசாயிகள் கவலை



கிளிநொச்சி, பெப். 3

தொடர் மழையால் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல் அறுவடை தொடங்கிய நிலையில் கடந்த மூன்று நாள்களுக்கு மேலாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை வீதியில் கூட உலர வைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. நெல் உலர விடும் தளங்கள் இல்லாமையால் வீதிகளில் நெல்லை உலர விடுவது வழமையானது. ஆனால் தற்போது உலர விட்ட நெல் கூட மழையால் நனைந்த நிலையில் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். பெருமளவு நிதி உரத்துக்கும் மருந்துகளுக்கும் செலவு செய்து அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் தொடர் மழை பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தென்மராட்சியில் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள வயல்களில் வெள்ளம் தேங்கிக் காணப்படுவதால் நெல் அறுவடையில் தாமதமேற்படலாம் என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். அத்துடன் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் போதிய அளவு நீர் காணப்படுவதால் சிறுதானியப் பயிர்களை நடுகை செய்யவும் விவசாயிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தனர். (ஒ-14,13,9,66,17)

## வீதியில் சென்றவரை மறித்து கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

### மிருசுவிலில் சம்பவம்

சாவகச்சேரி, பெப்.3

இரவு உணவை கடையில் வாங்க வீதியில் நடந்து சென்ற ஒருவரை வழிமறித்த கும்பலொன்று கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மிருசுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் பாலாவி வடக்கைச் சேர்ந்த 26 வயதுடைய குடும்பத் தலைவரே வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் மிருசுவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-9)

## தமிழ் பொலிஸ் அலுவலர் ஹெரோய்னுடன் கைது!

யாழ்ப்பாணம், பெப். 3

தமிழ் பொலிஸ் அலுவலர் ஒருவர் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பிராந்தியத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேடகுற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினரால் கோப்பாய் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 100 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது என்று யாழ்ப்பாண விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 29 வயது பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (ஒ-14,26)



## யானைகளால் பயிர்கள் நாசம்

முல்லைத்தீவு, பெப். 3

விசுவமடு நாச்சிகுடாப் பகுதியில் கடந்த சில தினங்களாக, காட்டு யானைகள் வாழ்வாதாரப் பயிர்களை அழித்து துவம்சம் செய்து வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குடியிருப்புப் பகுதியில் யானைக்கூட்டம் பயிர்களை மிதித்து துவம் சம் செய்கின்றது. அத்துடன் வாழ்வாதார பயிர்களான தென்னை, பூசணி உள்ளிட்டவற்றை முற்றுமுழுதாக அழித்துள்ளது. கடந்த வருடமும் பூசணி மற்றும் தென்னை பயிர்களை அழித்தது. அதுபோன்று இந்த முறையும் பல அழிவை காட்டு யானைகள் ஏற்படுத்தியுள்ளன. வாழ்வாதாரத்துக்காக மேற்கொள்ளப்பட்ட பயிர்களை யானைகள் அழித்து வருவதால் மிகுதிப் பயிர்களைப் பாதுகாப்பதற்காக இரவு வேளை நித்திரை செய்யாமல் பல விவசாயிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பில் மாவட்டச்செயலர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோருக்கு தெரியப்படுத்திய போதிலும் உரிய இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். (ஒ-14,27)

## மணவாளக்கோலமும் சங்காபிஷேகமும்

யாழ்ப்பாணம், பெப்.3

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக மணவாளக்கோல திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-17)

# நியாய விலையில் நெல்லை அரசே கொள்வனவு செய்க!

### விவசாய சம்மேளனங்களால் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம். பெப். 3

விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் நியாய விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என விவசாயிகளால் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இரணைமடு விவசாய சம்மேளனத்தால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்த கடிதத்தின் பிரதி, கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில்,

நெல்லை சந்தைப்படுத்தும் சபை மூலம் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் போதிய நிதி இல்லாததால் நெல் கொள்வனவை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பெரும்போகம் மேற்கொள்ளப்பட்டபோதும் நெல்லுக்கான நியாய விலையின்றி பெரும் நட்டத்தை விவசாயிகள் எதிர்நோக்க நேரிடும். எனவே விவசாயிகள் எதிர்நோக்கும் இன்னல்களைக் கருத்திற்கொண்டு விவசாயிகள் பயன் பெறும் வகையில் அரசாங்கத்தால் நியாயவிலையில் நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும் - என்றுள்ளது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் ஐந்து பரீட்சையில்

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் அல்லாரை தமிழ் வித்தி.முதலிடம்

சாவகச்சேரி, பெப். 3

கடந்த 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி வீதத்தில் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் தென்மராட்சி வலயத்தில் முதலிடம் பெற்றுள்ளது.
வெட்டுப்புள்ளிக்கு மேல் 60 வீத சித்தியையும், 100 புள்ளிக்கு மேல் 100 வீத சித்தியையும் பெற்று பாடசாலைக்கும், தென்மராட்சி கல்வி வலயத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது.
இதேவேளை வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14,159)

## தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலையின் பரீட்சை முடிவுகள் வருமாறு...

**யா / ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை**

தி.கதிர்சன் -167, ர.ஆதீஷ்வர் -163, சி.ரிசானா 163, த.அபிலயன் 157, டே.நிதிஸ் 153, ந.தனுஜன் 152, கு.நிருபன் 152, பி.கஜலக்சன் 151, மு.ஜெனிஸ்ரன் 149, சு.அபிஷயன் 148, ச.பவித்திரன் 147, றோ.தன்சிகா 146, கு.டிதுஷான் 146, ர.தனிஷ்கா 146,
நி.தன்சாந் 145, ந.ஹனிஷ்கா 145

## பூ மரக்கன்று நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.3

கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் தேரோடும் வீதியில் பூமரக்கன்று நடும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நாளில் முற்பகல் 11 மணியள வில் இடம்பெறவுள்ளது.
சுவிஸ்வாழ் சி.சிவநேசன் குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சுபநிகழ்ச்சி ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அனுகூலம் உண்டாகும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை.

**கன்னி:** நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். சிரமங்கள் ஏற்படும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும்.


**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1957




மறைவு 02 . 02 . 2023

## கந்தவனம் கணேசலிங்கம் (கணேஸ்)

யாழ். கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் கணேசலிங்கம் (கணேஸ்) அவர்கள் நேற்று (02.02.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சுலோஜனாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவேந்திரன் மற்றும் தயாளினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜானி, சிந்துஜன், சுலக்சன், ஜனகன் (பெறாமகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவாஸ்கர், லசித்தா, ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதிரா, ஹர்ணி, ஹரிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 4696 375 (சிந்துஜன்)




அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

**தைப்பூச மஞ்சத்திருவிழா**

காலம் : 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை

பால்குடப்பவனி காலை 5.30 இணுவில் மருதனார் மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்

பால்குடம் எடுக்கும் அடியவர்கள் முன் பதிவுகளை ஆலயத்தில் மேற்கொள்ளவும்.

- காலை: 9.30 மணிக்கு மாபெரும் பொங்கல் விழா ஆரம்பமாகி 2.30 மணிக்கு நிறைவுபெறும்
- மாலை : 6.00 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதி வலம் வரும் நிகழ்வும் தமிழரின் கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

............. விளம்பர அனுசரணையாளர்கள் .............

குமரன்
கட்டடப் பொருள்கள்
விற்பனையாளர்
கல், மணல், சிமெந்து, கம்பி, சீற், ஓடு, செங்கல், பெயின்ற் மற்றும் அனைத்து விதமான கட்டடப் பொருள்களையும்மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றக்கொள்ளலாம்
தொடர்பு: 077 175 4667,
077 400 2263, 075 500 2263

அக்ஸய
மஹால்
அக்ஸய
பூட்சிற்றி
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸீகூஹம - ரேனிஹம - அஞ்சாஹம

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அதிகாரத்தைப் பகிர்தலும் பறித்தெடுப்பும்

கணக்குப் பிள்ளை பேசக்கூடாது, கணக்குப் புத்தகம் பேச வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், இலங்கை அரசியலில் கணக்குப்புத்தம் ஒருபோதும் பேசியதில்லை. கணக்குப்பிள்ளைகளான – அரசியல்வாதிகள்தான் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். 1987ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் பேசுபொருளாக இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியே, 36 ஆண்டுகளின் பின்னரும் பேசிக்கொண்டிருக்கின்றோம், பிடுங்குப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். இதுதான் இலங்கைத் தீவின் முன்னேற்றம் (?)

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நேரத்தில் இந்தியா கைகொடுத்து உதவியது. இலங்கையின் மீது பரிதாபப்பட்டு அந்த உதவிகள் வழங்கப்படவில்லை. ஆதாயம் ஒன்றை எதிர்பார்த்து அந்த உதவிகளை இந்தியா வழங்கியது என்பது பரகசியம். உதவிகளை வழங்கி அதன் ஊடாக இலங்கையை ஒருபிடி பிடிக்கின்றது இந்தியா. பாரத தேசத்தின் தலையீட்டுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம் பிரசவித்த குழந்தையே 13ஆவது திருத்தம். அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு பிராந்திய வல்லரசு என்று மார்தட்டிக் கொள்ளும் இந்தியா 36 ஆண்டுகளாக இலங்கையைக் கெஞ்சிக் கொண்டிருக்கின்றது. இலங்கையும் 'இந்தா நடைமுறைப்படுத்துகின்றேன்' என்று போக்குக்காட்டிக் கொண்டுதான் இருக்கின்றது.


இப்போது முதல் தடவையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றார். காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும், இல்லையேல் அதை அரசமைப்பிலிருந்து ஒழிக்கவேண்டும் என்று சூளுரைத்திருக்கின்றார். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வந்து சென்ற கையோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறியிருந்தார். தற்போது இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலர் விக்ரோறியா நூலண்டிடமும் இந்த உறுதிமொழியை அவர் வழங்கியிருக்கின்றார். உலக வல்லரசான அமெரிக்காவிடமும், பிராந்திய வல்லரசான இந்தியாவிடமும் ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று உறுதிவழங்கும் அதேசமயத்தில், ஏற்கனவே 'தொற்றுப்பறியாக' கோறை விழுந்த மரம்போல் உள்ள 13ஆவது திருத்தத்திலிருந்து மேலும் அதிகாரங்களைப் பிடுங்கியெடுக்கும் கைங்கரியத்தையும் அவரது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

மாகாணம் மற்றும் மத்தி ஆகிய இரண்டு நிர்வாகங்களுக்கும் பொதுவான நிரலில் கல்வி அதிகாரம் உண்டு. மாகாணத்துக்குரிய பாடசாலைகளை தேசிய பாடசாலை என்ற பெயரில் மத்திய அரசாங்கம் அதிகாரத்தை கையகப்படுத்தி வந்தது. இப்போது மாகாணத்துக்கு உரித்தான மற்றொரு அதிகாரத்திலும் கைவைத்துள்ளது. பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்ளீர்க்கும் அதிகாரம் முற்றுமுழுதாக மாகாணத்துக்குரியது. ஒற்றையாட்சிக்குள், மாகாணத்துக்குரிய அதிகாரத்தை மத்திய அரசாங்கம் கையகப்படுத்துவதற்கு வழிவகை இருந்தாலும் அதனைச் செயற்படுத்துவதற்கு ஒரு வழிமுறை உள்ளது. மாகாணசபைகளின் சம்மதத்தைப் பெற்றே அவற்றுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மத்தி மீளப்பெற்றுக் கொள்ள முடியும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபை நடைமுறையில் இல்லாத இந்தச் சமயத்தில், ஆளுநர்கள் ஊடாக அத்தகைய ஒப்புதலைப் பெற்று மத்திய அரசாங்கம் அதிகாரத்தை பறித்தெடுத்துள்ளது.

திவிநெகும சட்டத்தின் ஊடாக மாகாணத்தின் அதிகாரங்கள் மத்தியின் வசமாக்கப்பட்டன. அப்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணசபை ஆட்சியில் இல்லாத நேரத்தில், ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் அதற்கு ஒப்புதல் வழங்கியது தவறானது என்று அப்போதைய பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தீர்ப்பளித்திருந்தார். (இதனால் அவர் ராஜபக்சக்களால் பதவி விலக்கப்பட்டமை வேறு கதை.) ஆனால், இப்போது அதையே ரணில் ராஜபக்ச அரசாங்கம் செய்திருக்கின்றது. மாகாணத்துக்குரிய கல்வி அதிகாரத்தில் கைவைத்திருக்கின்றது, இது தவறானது. ஆனால், இதனைச் சட்டச்சவாலுக்கு உட்படுத்தவேண்டிய தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளோ தங்களுக்குள் குடுமிச்சண்டை பிடித்துக்கொண்டிருக்கின்றன. நாம் இப்படி நமக்கிடையே முரண்படுதல் பேரினத்துக்கு எப்படி வாய்ப்புகளை வழங்குகின்றது என்பதை இனியாவது இவர்கள் உணர்வார்களா?

நாளொரு நல்வார்த்தை

"எந்தச் சூழ்நிலையிலும் மற்றவருக்கு நீ தாழ்ந்துவிடாதே. அவ்வாறு தாழ்வது அவமானத்திற்குரியதாகும்" சுப்பிரமணிய பாரதியார்



# ஐ.நா. பொதுச்சபை பரிந்துரையை செயற்படுத்த தவறியது இலங்கை

## ஆணையாளர் அலுவலகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.3

ஐ.நா. பொதுச் சபையின் உலகளாவிய மதிப்பீடு தொடர்பான குழுவால் 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது 2017 – 2021ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்கென தேசிய ரீதியான மனித உரிமைகள் செயற்றிட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் மனிதஉரிமைகள் நிலைவரம் தொடர்பான தகவல்கள் நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச்சபையின் உலகளாவிய கால மதிப்பீடு தொடர்பான குழுவால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

மீளாய்வுக்கென ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட 13 பக்க அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதில் உள்ளதாவது:

இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் நியமனத்தின்போது போதியளவிலான வெளிப்படைத்தன்மை, பல்லினத்தன்மை மற்றும் சுயாதீனத்துவம் என்பன பேணப்படாமை குறித்தும், அந்த ஆணைக்குழு மனிதஉரிமைகள் தொடர்பில் கொண்டிருக்கும் ஆணையை உரியவாறு செயற்படுத்துவதற்குத் தவறியுள்ளமை தொடர்பாகவும் ஆணையாளர் கரிசனை வெளியிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்ட நடைமுறையாக்கம், நிர்வாகம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மேலோங்கிவரும் இராணுவத்தின் வகிபாகமும் கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

இராணுவ சோதனைச் சாவடி என்ற ரீதியில் இராணுவப் பிரசன்னம் தொடர்வதுடன் போதைப்பொருள் தொடர்பான சட்ட நடைமுறையாக்கம், விவசாயம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் இராணுவத்தின் வகிபாகம் அதிகரித்துள்ளது.

சிவில் செயற்பாடுகளில் காணப்படும் இராணுவ ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்துக் காணிகளும் பொதுமக்களிடம் மீளக்கையளிக்கப்படவேண்டும்.

இலங்கையின் பாதுகாப்புப்படையினரால் நிகழ்த்தப்பட்ட கடத்தல்கள், சட்டவிரோத தடுத்து வைப்புகள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் என்பன குறித்தும் பொலிஸ்காவலின் கீழ் இடம்பெறும் தொடர் மரணங்கள் தொடர்பாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடுவதற்கு அவசியமான செயற்திறன்மிக்க கொள்கையொன்று இன்னமும் தயாரிக்கப்படாமை தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் தொடர் பயன்பாடு, தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கு உள்ளடங்கலாக நீதித்துறை மற்றும் சட்டத்தின் ஆட்சியில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை 04.02.2023 சனிக்கிழமை தை 21

சுபநேரம் : 03.35 - 05.05
ராகுகாலம் : 09.35 - 11.05

சுதந்திரதினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் சுற்றுலாவை மேம்படுத்த பிரபல இந்திய நிறுவனம் முதலீடு

## யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.3

வடக்கின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கென இந்தியாவின் பிரபலமான சுற்றுலாத்துறை நிறுவனமான வி.ஜி.பி. நிறுவனம் புதிய முதலீடுகளை செய்யவுள்ளது.



இதற்கென குறித்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் முனைவர் கலைமாமணி செவாலியர் விஜி சந்தோஷம் தலைமையிலான உயர்மட்டக்குழு யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்து வடக்கு மாகாண அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளது.

யாழ்.நகரிலுள்ள தனியார் விடுதியொன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் எவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளலாம்? அதற்கான சாதக, பாதகங்கள் குறித்து பிரதானமாக ஆராயப்பட்டன.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் வாகீசன் கூறுகையில், வடக்கின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு வி.ஜி.பி. நிறுவனம் முன்வந்துள்ள நிலையில் அவர்களுக்குத் தேவையான வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவித்தார்.

வி.ஜி.பி. குழுமமானது இந்தியாவில் பிரபலமான சுற்றுலாத்துறை நிறுவனமாக விளங்குகின்றது. அதனை நாம் சரிவர பயன்படுத்தி வடக்கு சுற்றுலாத்துறையை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் குறிப்பிட்டார்.

சந்திப்பில் யாழ்.இந்தியத் துணை தூதரகத்தின் தூதுவர் ராஜேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.வாகீசன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோரும் இந்திய தரப்பில், வி.ஜி.பி. குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் முனைவர் கலைமாமணி செவாலியர் விஜி சந்தோஷம் , நீதியரசர் டீஎன் வள்ளிநாயகம், பேராசிரியர் உலக நாயகி பழனி, பேராசிரியர் திலகவதி, பேராசிரியர் புவனேஸ்வரி, வழக்கறிஞர் அப்துல் கனி, திருமதி கலைவாணி, திருமதி சரண்யா, பீற்றர், முனைவர் பட்ட ஆய்வாளர் நாகப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-20)

# ஈழத்தமிழரின் உரிமையே இந்தியாவின் பாதுகாப்பு

## ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 3

ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படுகின்ற சுதந்திரமும், உரிமையுமே இந்தியாவின் பாதுகாப்புக்கும் அத்திபாரமாய் அமையும் - இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் புதுடில்லியில் இடம்பெற்ற தமிழர்களுக்கான சமூக நல அறக்கட்டளையின் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு அடிப்படைத் தீர்வுமின்றி நிரந்தரத் தீர்வுமின்றி அவல நிலைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது ஈழத்தமிழினம் 70 ஆண்டு காலமாக தங்களது உரிமைக்காக ஆயுத ரீதியாகவும், அகிம்சை ரீதியாகவும் போராடுகின்ற இனமாகவே இலங்கையில் வாழ்ந்து வருகின்றது.

எமது மக்களுடைய உரிமை சார்ந்த போராட்டங்கள் ஆயுத ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போது எமது மக்கள் தாயகத்தில் பலம்மிக்க ஒரு சக்தியாக இருந்தார்கள். இலங்கைத் தீவைப் பொறுத்த வரையில் 65 சதவீதம் கடற்பரப்பையும் கடல் சார்ந்த நிலத்தையும் கொண்ட எமது தாயகம் எமது கட்டுப்பாட்டில் நிழல் அரசாங்கம் போன்று இருந்தது. அந்தக் காலத்தில் தெற்காசியப் பிராந்தியத்தில் மிக முக்கியமான பகுதியாகிய எமது தாயகப் பகுதி தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாக இருந்தது. அது தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஓர் இரும்புச் சுவராகவே இருந்தது.

ஆயுதப் போராட்டம் திட்டமிட்டு அழிக்கப்பட்ட பின்னர் நாங்கள் எமது பலத்தை எமது தாயக மண்ணில் இழந்து நிற்கின்றோம். உண்மையாக இலங்கை அரசாங்கம் காலம் காலமாக இந்திய அரசாங்கத்தை மிக இலகுவாக ஏமாற்றி வருகின்றது.

இன்று தமிழர்களின் வல்லாதிக்கப் பூமி வல்லரசுகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. இது தமிழர்களுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் மிகப் பாதகமான விடயமாகவே பார்க்கப்பட வேண்டும் - என்றார். (ம-27)

### கௌரவிப்புக்கு விவரங்கள் கோரல்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்படவுள்ளனர். எனவே சித்தியடைந்தோர் தொடர்பான விவரங்களை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் சங்க தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

# வரிச்சலுகை வழங்க எதிர்பார்க்கிறது அரசு!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.3

வரிக்கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தரப்பினர் தொடர்பிலும் சிந்தித்து ஏதேனுமொரு வகையில் வரிச்சலுகையை வழங்க முடியுமா? என அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் பெறுவதற்காக பேச்சுகளை ஆரம்பித்தபோது காணப்பட்ட நிலைமையைவிட தற்போது சாதகமான நிலைமையே காணப்படுகின்றது. கடன் மறுசீரமைப்பு சவாலுக்குரியதாகவே காணப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் நேர்மறை பொருளாதாரத்தை நோக்கிப் பயணிப்பதே எமது இலக்காகும். தற்போது நாட்டின் பொருளாதாரம் 10 சதவீதம் எதிர்மறையாகவே காணப்படுகிறது.

இவ்வாண்டியின் இறுதியில் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படக்கூடும் என்று மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

வரிச்சலுகை வழங்கப்பட்டமை காரணமாக கடந்த 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தின் வருமானம் 75 சதவீதத்தினால் குறைவடைந்தது. தனிப்பட்ட காரணங்களுக்காக வருமான வரி அதிகரிக்கப்படவில்லை.

ஆயினும் இதனால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏதேனுமொரு வகையில் சலுகைகளை வழங்க முடியுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது - என்றார். (ச-இ)

# தீவக மருத்துவமனைகளில் மருத்துவ நெருக்கடி தீவிரம்!

## அம்புன்ஸ் இன்றி நோயாளர் இறக்கும் அபாயம்
## வேலணை பிரதேசசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 3

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு உள்ளிட்ட தீவக மருத்துவமனைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள் இன்மையால் நோயாளர்கள் உயிரிழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என வேலணை பிரதேசசபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

புங்குடுதீவு பிரதேச மருத்துவமனைக்கென்று 2017 இல் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியே நயினாதீவு, நெடுந்தீவு பிரதேசங்களில் வாழும் நோயாளர்களை யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்த அம்புலன்ஸ் வாகனமும் கடந்த ஏழு மாதங்களாக பழுதடைந்த நிலையில் சுமார் 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைக்குரிய அம்புலன்ஸ் வண்டியே அவசர தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

அண்மையில் பாம்பு தீண்டிய நோயாளியொருவர் காலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் மாலை 4 மணியளவிலேயே அவரை யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு ஊர்காவற்றுறை மருத்துவமனைக்குரிய அம்புலன்ஸ் வண்டி வருகை தந்துள்ளது. அவசர சிகிச்சைக்குரிய நோயாளிகள் பல மணிநேரம் கடந்தே மருத்துமனையில் சேர்க்கப்படுகின்றனர். இதனால் அவசர நோயாளிகள் இறக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கும் தள்ளப்படுகின்றனர்.

அதேவேளை தீவக மருத்துவமனைகளில் தொடர்ச்சியாக ஊசி மருந்துகள் உள்ளிட்ட மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக இங்கு சிங்கள மொழி தெரிந்த மருத்துவர்களே தொடர்ச்சியாக நியமிக்கப்படுகின்றனர்.

இத்தகைய நெருக்கடிகளை தேர்தலின்போது வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தரும் அரசியல்வாதிகள் பின்பு எட்டியும் பார்ப்பதில்லை.

பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் தீவக மருத்துவமனைக்கான அம்புலன்ஸ் வண்டி தொடர்பில் எதுவித அக்கறையும் எவரும் செலுத்தவில்லை.

ஆகவே தீவக மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவ நெருக்கடியை - நோயாளர் எதிர்கொள்ளும் இன்னல்களை நிவர்த்தி செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேலணை பிரதேசசபை உறுப்பினர் வலியுறுத்தினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 3

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-14-66)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சுகிர்தினி ஜீவானந்தன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் – வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு)

தோற்றம்
14.09.1990

மறைவு
21.12.2022

கடந்த 21.12.2022 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வீரசிங்கம் வீதி,
கச்சாய் றோட், சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
04 . 06 . 1952



மறைவு
07 . 01 . 2023

### அமரர் சிவபாலசிங்கம் புஸ்பாம்பிகை மீனாட்சி

அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.02.2023) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 06.02.2023 திங்கட்கிழமை அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பாதல் அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பூதராயர் வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்

(CS 23150) (2-6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18 . 01 . 1968



மறைவு
15 . 01 . 2022

### அமரர் சின்னத்தம்பி பிரபாகரன் (பிரபாண்ணை)

**பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்**
**அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்**
**உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்**
**வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று**
**மறைந்ததையா எம் உள்ளங்களில் என்றும்**
**நிலைத்திருக்கின்றீர்கள்**

அன்னாரின் முதலாம் ஆண்டு பிரார்த்தனை இன்று (03.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரந்தன், நீர்வேலி.

நினைவுகளுடன்.....

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 11 . 1955



மறைவு
02 . 02 . 2023

### அரியகுட்டி யோகலிங்கம்

3ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், மணல்தறை வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட அரியகுட்டி யோகலிங்கம் நேற்று (02.02.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி தங்கம்மா தம்பதியரின் அன்பு ம்கனும், காலஞ்சென்றவர்களான கணேசையா ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரி (மாலா) அவர்களின் பாசமிகு கணவரும், டிலானி (லண்டன்), ஜங்கரன் (கிராம உத்தியோகத்தர் நல்லூர் பிரதேச செயலகம்), ஜெனார்த்தனன் (ஜேர்மன்), நிறோஜா ஆகியோரின் அன்பு தந்தையும், குணரெட்ணம் (லண்டன்), தனுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), நளினி (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தங்கலிங்கம், துரைலிங்கம், புஸ்பமலர் மற்றும் கணேசலிங்கம் (ஜேர்மன்), சந்திரலிங்கம் (நோர்வே) ஆகியோரின் சகோதரரும், அமரர் ஜெனரட்ணசிங்கம் (ஜெனம்) பாலேஸ்வரி, சந்திரேஸ்வரி, சந்திரேஸ்வரன், அமரர் விமலேஸ்வரன், யோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், ஹரிஷன் (லண்டன்), சாய்ஷன் (லண்டன்), திரிஷாணன், பிரனுசன், டிவிஸ்ணன் (ஜேர்மன்), கவிநயன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**38/32, மணல்தறை வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23262) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘13’ஐ நடைமுறைப்படுத்தினால் இனமுரண்பாடுகள் வலுக்கும்!

## ஜயந்த சமரவீர எச்சரிக்கை

கொழும்பு, பெப். 3
13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இனங்களுக் கிடையே முரண்பாடுகள் வலுப்பெறும். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடி யாது. நாட்டு மக் களை ஒன்றுதிரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் நாடா ளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1987 ஆம் ஆண்டு அப்போதைய ஜனா திபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை இந் தியா பலவீனப்படுத்தி - பலவந்தமாக 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது. கயிற்றால் கட்டி தொங்கவிடப்பட்ட கூர்மையான வாள்களை போன்றே 13 ஆவது திருத்தம் அறிமுகப்படுத் தப்பட்டது.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு நடத்தவேண்டும். மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை தனக்குச் சாதகமாகக் கெண்டு ஆட்சிபீடமேறிய ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அருகதையற்றவர். நாட்டைப் பிளவுபடுத்தும் ரணில் விக்கிர மசிங்கவின் இத்தகைய செயற்பாடு தூக் கியெறியப்பட வேண்டும். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி இனங்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்தால் மக்களை திரட்டிப் போராட்டத்தில் குதிப்போம்- என்றார். (ச-இ)

# ஜெய்சங்கருடன் மிலிந்த சந்திப்பு

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை இந்தியாவுக்கான இலங் கைத்தூதுவர் மிலிந்த மொரகொட கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லி யில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கும் இந்தி யாவுக்கும் இடையிலான தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டது. மேலும் இந்திய வெளிவிவகார அமைச் சர் அண்மையில் மேற்கொண்ட இலங் கைப் பயணத்தின் பின் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந் தார். (ச-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரப் பகுதியில் இருக்கும் உணவகம் ஒன்றிற்கு


**சமையல் உதவியாளர்**
**உணவு பரிமாறுபவர்: (18-21)**
**காசாளர்: (18-21, ஆண்/பெண்)**

தொடர்பு: 077 576 8321



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 . 01 . 1941



மறைவு
15 . 01 . 2022

**அமரர் முருகையா நகுலேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி:- திரியோதசி

கண்ணுக்கு நிலவாய் நெஞ்சத்தில் அன்பால்
மண்ணில் என்றும் எங்களோடு
கண்கண்ட தெய்வமாய் வாழ்ந்து
விண்ணுக்கு வாழச் சென்று ஒரு வருடமாகிற்றே!

கீரிமலை வீதி,
மாவிட்டபுரம்.

குடும்பத்தினர்.
077 922 5648



## மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 07 . 1934



இறப்பு
02 . 02 . 2023

**விமலசிங்கம் புஸ்பராணி**

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விமலசிங்கம் புஸ்பராணி நேற்று (02.02.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை சோமசுந்தரம் தம்பதி யரின் மகளும், சிவபாதசுந்தரம் (கனடா),சிவராஜா (கனடா), திருஞானசம்பந்தர் (அவுஸ்ரேலியா), காலஞ் சென்றவர்களான கந்தசாமி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற சோமசுந்தரம் விமலசிங்கம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், விமல்ராஜ் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்-C.T.B, வவுனியா), சோமநாத் (லண்டன்), செல்வசுதா ஆகி யோரின் அன்பு தாயாரும் இரத்தினராசா (CMSO,D.C.S (Planning), KAITHADY), நிர்மலா, கலாவதி(லண்டன்) ஆகி யோரின் அன்பு மாமியாரும், விஜயகுகன் (கச்சேரி-யாழ்ப்பாணம்), யசோகுமார் (பொலிஸ்- கொழும்பு), விதுர்சன், அபிதா (லண்டன்), ஜெனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.02.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு.இரத்தினராசா
“சுந்தரபவனம்”
077 922 6701

சண்டிலிப்பாய் தெற்கு,
சண்டிலிப்பாய்.



## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் 2023

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 16.02.2023 வியாழக்கிழமை நூ.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும இறுதித் திகதி :- 16.02.2023 வியாழக்கிழமை பி.ப 02.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 16.02.2023 வியாழக்கிழமை பி.ப 2.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 400,000.00 | 4,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக்கடை | 1,000.00 | 200,000.00 | 2,000.00 | 1,000.00 |

குறிப்பு :

- மாதவாடகை யாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடாத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடிதஉறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒருபிரதியை “பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்” அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம் உப அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பபடிவங்களை மல்லாகம் உபஅலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- அளவெட்டி மலைவேம்படிசந்தையிலிருந்து **1 KM** தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

02.02.2023

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்குபிரதேச சபை- காங்கேசன்துறை.

CR 39187 (5x21) 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"ஸ்ரீ கைலேஸ்வரம்" (தீவு சிவன் கோவில் ) கொழும்பு கப்பித்தாவத்தை



அருள்மிகு ஸ்ரீ கருணாகடாட்சி அம்பிகை உடனுறை

# ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானம்

## 33 குண்ட உத்தமோத்தபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹாகும்பாபிஷேக பெருவிழா

### மஹா கும்பாபிஷேகம் 03.02.2023

சிவன் அடியார்களே!

மங்களகரமான அகண்டாகார சித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் தரிசித்து உய்யும் உருவத்திருமேனி தாங்கி எழுந்தருளும் திருக்கோயில்கள் பல நிறைந்துள்ள பரத கண்டத்தில் சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கை மணி நாட்டின் தலைநகர் "குபேரபத்மம்" எனப்படும் கொழும்பு மாநகரில் மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலேஸ்வரம் எனும் கேந்திர ஸ்தானத்தில் திருவிளங்க நகரத்தாரின் சிவதர்ம நிதியில் வணிக வைசிக செட்டியார் வம்சத்தினரால் புராதனமாக ஸ்தாபிக்கப்பட்ட அருள்மிகு ஸ்ரீ கருணாகடாக்ஷி அம்பாள் உடனுறை ஸ்ரீ கைலாசநாதப் பெருமான் ஆலயம் சகல பெருமக்கள் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டு அழகுற வர்ணம் தீட்டி நிகழும் மங்களமிகு சுபகிருது வருடம் தை மாதம் 20 ஆம் நாள் (03.02.2023) வெள்ளிக்கிழமை புனர்பூச நக்ஷத்திரமும் திரயோதசி திதியும் சித்த யோகமும் அமைந்த காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மீன லக்ன சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணமும் அதற்கு முன், பின் நடைபெறும் கிரியா காலங்களிலும் கலந்து அருள்நிலை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### கிரியாகால விபரம்

| | |
|---|---|
| 03.02.2023 வெள்ளிக்கிழமை | தை மாதம் 20ம் நாள் காலை 5.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூஜை, ஹோமம், மஹா பூர்ணகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி, தானங்கள், பலிகள், சர்வமங்கள வா த்திய கோஷ சகிதம், கும்ப பிரதக்ஷணம், ராஜகோபுரங்கள், ஸ்தூபிகள், அபிஷேகம், முகூர்த்த தானம், மஹா கும்பாபிஷேகம், பரிவார மூர்த்திகள் அபிஷேகம், எஜமான் அபிஷேகம், ஆசிர்வாதம், ஆசியுரை, மஹாபிஷேக பூஜை, அன்னபோசிப்பு முதலியன. |

**கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற நல்லாசி வழங்குபவர்கள்**

கிரியாகலாபமணி:- கலாநிதி சிவஸ்ரீ. நா.சோமஸ்கந்தக் குருக்கள் சுன்னாகம்

ஸ்தாபகர் :- இந்து ஆகம நவீன கலை கலாசார நிறுவனம் தவத்திரு மீனாட்சி சுந்தரர் தம்பிரான் சுவாமிகள் (தருமை ஆதீனம் கிளைமடம் திருக்கேதீஸ்வரம்)

சிவாகம வைதீக கலாமணி :- சிவஸ்ரீ. சண்முகேஸ்வரக் குருக்கள் (கொழும்பு)

**சர்வசாதகாச்சாரியார்கள்**

| | |
|---|---|
| வைதீக சிவாகம சுடர் | சிவஸ்ரீ ரவி பாஸ்கரக் குருக்கள் (யாழ்ப்பாணம்) |
| சாதக திலகம் | பிரம்மஸ்ரீ ப.சனாதனசர்மா ( BBA Hones) |
| சிவாகம பூஷணம் | பிரம்மஸ்ரீ S. விக்னேஸ்சிவம் (பாண்டிச்சேரி) |
| சாதக இளம்சுடர் | பிரம்மஸ்ரீ சு.கவிஷான் சர்மா (புத்தளம்) |

**பிரதிஷ்டா பிரதமகுரு**

முத்தமிழ்குருமணி சகலாகமசாங்கிரகர்

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

(கதிரமலை சிவன் தேவஸ்தானம் - சுன்னாகம்)

கும்பாபிஷேக நெறியாழ்கை சித்தாந்த நல்லறிஞர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்

**ஓதுவார்:-**

திருமுறை நெறிச்செல்வர் இளம் சைவப்புலவர் ஜெ. அருள்தாஸ்

**தேவபாராயணம்**

இந்து ஆகம நவீன கலை கலாசார நிறுவன குருகுல மாணவர்கள்

**தேவஸ்தான குருமார்**

சிவஸ்ரீ சு.மகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ யோ.ரஞ்சித குருக்கள், சிவஸ்ரீ இ.பிரபாகர குருக்கள், சிவஸ்ரீ ரா.வரதராஜ குருக்கள், சிவஸ்ரீ தி. விக்னராஜா குருக்கள், சிவஸ்ரீ வை. வைத்தீஸ்வர சர்மா

**மங்கள இசை**

ஆலய ஆஸ்தான வித்துவான்கள் ஐ.சுதர்ஷன், ஈ. கோபிகன் குழுவினர்

**ஆலய புனரமைப்பு வர்ண வேலைகள்**

ரி.சி. கொன்ஸ்ரக்சன் (கோப்பாய் யாழ்ப்பாணம்) மற்றும் இலங்கை, இந்திய கலைஞர்கள்

வர்ணப்பூச்சு வடிவமைப்பு:- தில்லைநாதன் சந்திரகுமார்

குறிப்பு:- தொடர்ந்து மண்டலாபிஷேகம் 48 தினங்கள் காலை 8 மணிக்கு நடைபெறும். உபயம் செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-

NIPPON PAINT
THE COATINGS EXPERT
NIPPON PAINT LANKA (PVT) LTD
69A, Buthgamuwa Road, Rajagiriya
+94114600400

Gnanam Paints
No.558, Manipay Road, Oddumadam Junction, Jaffna
021 222 5577/ 077 618 4691

## 13 வேண்டாம்...

கொழும்பு, பெப். 3

நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல்களை உருவாக்கும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயல வேண்டாம்-இவ்வாறு பிரதான பௌத்த பீடாதிபதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று நேரில் வலியுறுத்தியுள்ளனர்.

கண்டிக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார். இதன்போது ஜனாதிபதியிடம் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை-13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று பௌத்த பீடங்களின் தலைவர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்று ஜனாதிபதியிடம் முன்னதாகக் கையளிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட நீங்கள் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளீர்கள். இந்த அறிவிப்பு நாட்டில் பெரும் குழப்பங்களை உருவாக்கியுள்ளது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், புராதன, வரலாற்று நினைவுச்சின்னப் பதிவுகள் மற்றும் மதச் சங்கங்களின் கட்டுப்பாடு உள்ளிட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் நாட்டில் பிரிவினைவாதத்தை மேலும் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படுகின்றன.

13ஆவது அரசமைப்புத் திருத்தம் முன்னைய நிறைவேற்று ஜனாதிபதிகளால் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாட்டில் ஏற்படக்கூடிய குழப்பங்களையும் அதன் தீங்கையும் அவர்கள் புரிந்துகொண்டதால் அவ்வாறு செய்வதைத் தவிர்த்தார்கள். அதை நீங்களும் நன்கு அறிவீர்கள். நிறைவேற்று அதிகாரம் மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் பொறுப்புக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் சுயாட்சியை குலைக்கும் இது போன்ற அரசியல் திருத்தங்களை நடைமுறைப்படுத்த முனைவது பொதுமக்களிடையே கடும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் பிராந்திய மற்றும் உலக சக்திகளின் ஆதரவைப் பெறுவதற்காக சில நிபந்தனைகளுக்கு உடன்படுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்ட போதிலும், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரம் போன்றவற்றுக்காக இதுபோன்ற ஆபத்தான முன்மொழிவுகளை நிராகரிக்க நாம் பாடுபடவேண்டும். எனவே நாட்டின் சுதந்திரம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பாக கடுமையான பிரச்சினைகளை உருவாக்கும் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவே கூடாது என மகாசங்கத்தினராகிய நாங்கள் வலியுறுத்துகிறோம்- என்றுள்ளது.

(அ-ம)

## வடக்கில்...

அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் திருகோணமலையின் சீனன்குடாவுக்கும் உப்புவெளிக்கும் இடைப்பட்ட பகுதியினூடாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் மழை எதிர்வரும் சனிக்கிழமை வரை தொடரும். மேலும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் தற்போது காற்றின் வேகம் மணிக்கு 35 கி.மீ. வேகத்தில் வீசுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் கரையைக் கடக்கும்போது காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கலாம். வடக்கு மக்கள் தொடர்ந்து அவதானமாக இருப்பது அவசியம் - என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்துவரும் நிலையில் கடந்த 24 மணிநேரத்துக்குள் முத்தையன்கட்டு குளத்தின் நான்கு வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

கிளிநொச்சியிலும் சில குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தின் பெரும்பகுதி வெள்ளக்காடாகியுள்ளது. (அ-ம-110)

## சிங்கள....

பது தமிழர் தேசத்தின் கரிநாளாகவே உள்ளது. இந்த நாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தாலும் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தாலும், சிவில் சமூக அமைப்புக்களாலும் முன்னெடுக்கப்படும் பேரணியில் தமிழர்கள் அலையெனத் திரளவேண்டும் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்.

இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

சிறிலங்காவின் சுதந்திரனதினமான பெப்ரவரி நான்காம் திகதி தமிழர் தாயகத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினாலும், வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர், தமிழர் சமூகத்தினாலும் முன்னெடுக்கப்படவுள்ள பேரணிக்கு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது தோழமையினைத் தெரிவிக்கின்றது. இந்தப் பேரணியில் தாயக உறவுகளை எழுச்சியுடன் பங்கெடுத்து, தமிழர் தேசத்தின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான குரலை, உலகின் செவிப்பறைகளை நோக்கி ஓங்கி ஒலிக்க அன்புரிமையோடு வேண்டுகின்றோம்.

இதேவேளை-இந்த நாளில் புலம்பெயர் தேசங்களில் சமூக அரசியல் அமைப்புக்களால் முன்னெடுக்கப்படுகின்ற கவனவீர்ப்பு நிகழ்வுகளுக்கு எமது தோழமையினைத் தெரிவித்துக்கொள்வதோடு, அனைவரையும் பங்கெடுத்துக்கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

சிறிலங்கா அரசானது சந்தித்துக்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான காரணியாக அமைந்த, தமிழர்கள் மீதான இனவழிப்பு போர், இனவழிப்பு இராணுவத்துக்கான செலவினங்கள் ஆகியனவற்றை மூடி மறைத்துவிட்டு, சர்வதேச சக்திகளிடம் கையேந்திக் கொண்டுள்ள சிங்கள பேரினவாத அரசு, தமிழர் தேசத்தின் மீதான தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தினை தொடர்ந்து நிலைகொள்ள வைத்துள்ளது.

இலங்கைத்தீவு முழுவதுமே சிங்கள தேசம் என்ற மனநிலையில், தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் பௌத்தமயமாக்கல், சிங்கள மயமாக்கலை மேற்கொண்டு வருகின்றது. இன அழிப்புக்கான பொறுப்புக்கூறலை ஜெனிவாவில் புதைத்துவிட்டு, தற்போது அரசியல் தீர்வு என்ற பெயரில் தமிழர்களை ஏமாற்றுகின்ற வித்தையை உலகுக்கு காட்ட முனைகின்றது. இந்த நிலையில், சிறிலங்காவின் சுதந்திர நாளை, தமிழர் தேசத்தின் கரிநாளாக வெளிக்காட்டுவதோடு, எமது நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான குரலை மீண்டும் ஓங்கி ஒலிக்க அணிதிரள்வோம் - என்றுள்ளது. (அ-ம)

## இனத்தை...

னனியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பன இந்தியாவின் முகவர்கள் என்றும் அவர் விமர்சித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது ஓர் உள்ளூராட்சித் தேர்தலாக இருந்தாலும் இந்தச் சூழலை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் பொருளாதாரரீதியாகவோ, அரசியல்ரீதியாகவோ எந்தவிதமான முன்னேற்றமும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை. போர்க்குற்றத்துக்கும் தீர்வு கிடைக்கவில்லை. எமது விடயங்கள் சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக இருந்தாலும் பாதிக்கப்பட்ட தரப்பான நாங்கள் இன்னமும் முன்னேற்றமடையாமலேயே இருக்கிறோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒரு கொடூரமான சட்டமாக இருக்கின்றது. எனினும், அந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் சிங்கள மக்கள் விடுவிக்கப்படுகின்றார்களே தவிர தமிழ் மக்கள் தொடர்ச்சியாகச் சிறைகளிலேயே வாடுகின்றனர். அத்துடன் இன்று அனைவராலும் பேசப்படும் 13ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருக்கின்ற ஒரு கட்டமைப்பு. ஒற்றையாட்சி என்பது சிங்கள பௌத்த ஆட்சி. அதில் வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை. அதனாலேயே தமிழ்ப் பெருந்தலைவர்கள் நீண்டகாலமாக இதனை நிராகரித்து வந்திருக்கின்றார்கள். விடுதலைப்புலிகள்கூட அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களால் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் இந்தப் படுமோசமான ஏமாற்று வேலைக்கு விலைபோனமையினாலேயே இந்தத் திருத்தம்பற்றி பலரும் இன்று பேசுகின்றார்கள், அதுவே உண்மை. இதனை நாம் எவ்வாறு மாற்றப்போகின்றோம். இந்தத் தேர்தல் ஊடாக மக்கள் தமது அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

போர் முடிவடைந்து 14 வருடங்களாகின்ற போதிலும், தமிழர்கள் தொடர்ந்தும் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இதனை நிவர்த்திசெய்வதற்கு உங்கள் கைகளில் இருப்பது வாக்குகள் தான். இந்த வாக்குகளை உங்களை ஏமாற்றியவர்களுக்கே நீங்கள் மீண்டும் செலுத்தப்போகின்றீர்கள் என்றால், நீங்கள் உங்களை ஏமாற்றுவதற்கு இணங்குகின்றீர்கள் என்றே அர்த்தம். விக்னேஸ்வரன் தனக்கு செயலாளர் பதவி தரவில்லை என்று பிரிகின்றார். ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய இந்தியாவின் முகவர் அமைப்புக்களும் தங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை என்று பிரிகின்றன. இவர்கள் பிரிந்து நிற்பதற்கு காரணம் கொள்கையல்ல பதவி. அனைவரும் கொள்கை என்ற பெயரில் இனத்தை விற்பதற்கு தயாராகியுள்ளனர். யார் இந்தியாவுக்கு அதிக விசுவாசமாக நின்று இனத்தை விற்பது என்பதே அவர்களிடையேயான போட்டி - என்றார். (ம-110)

# கட்டுமானப் பணியில் சரிந்தது காற்றாலை

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வந்த காற்றாலைக் கோபுரம் ஒன்று கட்டுமானப் பணியின் போது சரிந்து விழுந்துள்ளது. நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டு வந்த கோபுரங்களில் ஒன்று கடந்த மாதம் சரிந்து விழுந்துள்ளது.

கால்நடைகள் விவசாயிகள் மாத்திரம் சென்று வரும் பகுதி என்பதால் கோபுரம் உடைந்து விழுந்த விடயம் இதுவரை தெரியாமல் இருந்துள்ளது.

இந்த நிலையில் நறுவிலிக்குளம் பகுதியில் விவசாய நடவடிக்கைகளை பார்வையிடச் சென்றவேளை, கோபுரம் சரிந்து விழுந்துள்ளது தெரியவந்தது. அத்துடன் கோபுரம் விழுந்த வேளை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக பளுதூக்கிகிரேன்வாகனம் சேதமாகியதுடன் வாகனச் சாரதி காயங்களுடன் உயிர் தப்பினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-14.213)

## விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 3

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார அதிகார சபையால் 2023ஆம் ஆண்டுக்கான கலைக்கலசம் மற்றும் கலைத்தளிர் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். கலைக்கலசம் விருது (2022.12.31 ஆம் திகதி அன்று 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்), கலைத்தளிர் விருது (2022.12.31 ஆம் திகதி அன்று 40 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்),

கடந்த காலங்களில் கலைக்கலசம், கலைப்பருதிஎனும்பெயர்களில்விருதைப் பெற்றவர்கள் கலைக்கலசம் விருதுக்கும் கலைத்தளிர், இளங்கலைஞர் எனும் பெயர்களில் விருதைப் பெற்றவர்கள் கலைத்தளிர்விருதுக்கும்விண்ணப்பிக்க முடியாது. கடந்தகாலங்களில்கலைக்கலசம்மற்றும்கலைத்தளிர்விருதுகளுக்காக விண்ணப்பித்து விருது கிடைக்காதவர்கள் மீளவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

எனவேவிருதுக்குவிண்ணப்பிக்கவிரும்பும்கலைஞர்கள்விண்ணப்பப்படிவத்தை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அல்லது பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்என்பதுடன் விருதுதெரிவுக் குழுவின் தீர்மானமே இறுதியானது என்று பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெப்ரவரி 4

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாம், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஒன்றிணைந்து சிறிலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதியை கரிநாள் என்று அறிவித்து, சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகளை எதிர்த்தும், ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தமிழ்த் தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பின்னணியில் எழுந்துள்ள சூழலில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் காரணமாக முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சு எனும் போலி நாடகத்தைத் தோலுரித்து சர்வதேச சமூகத்துக்கு காட்ட வேண்டிய அவசியத்தாலும், கூட்டாக தமிழ் மக்கள் தமது நிலைப்பாடு களை வலுவாக முன்வைக்க வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையிலும் வடக்கிலிருந்து கிழக்கு வரையான பேரணியொன்றை நடத்துவது தொடர்பில் அறிவித்திருந்தோம்.

அனைத்து தரப்பினரும் மாணவர்களாகிய நாம் முன்னெடுத்துள்ள நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் மிகவும் வரவேற்றதோடு, முழு ஒத்துழைப்பை நல்குவதாகவும் கூறியிருக்கின்றனர். மக்களின் இந்தப் பேராதரவு எம்மையும், எமது போராட்டத்தையும் மேலும் வலுப்படுத்துகின்றது என்றே நாம் கருதுகின்றோம். அந்த வகையில், தமிழ் மக்கள் மிகப் பேரெழுச்சியுடன் கூட்டாக தமிழ் மக்களின் அபிலாஷைகளான பொங்கு தமிழ் எழுச்சியினூடாக வலியுறுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றை முன்னிறுத்தி இடம்பெறவுள்ள இந்தப் பேரணியை மேலும் வலுப்படுத்த வடக்கு கிழக்கு தழுவிய எமது வர்த்தக சமூகத்தினர், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேருந்து உட்பட அனைத்து தொழிற் சங்கங்களையும் பெப்ரவரி 4ஆம் திகதியன்று கடையடைப்பையும், பணிப்புறக்கணிப்பையும் மேற்கொண்டு ஹர்த்தாலை முழுமையாகக் கடைப்பிடித்து சிறிலங்காவின் சுதந்திரதினம் தமிழர் தேசத்தின் கரிநாள் என்பதை சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் உங்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள், தொழில் இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு காலாகாலமாக சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்புக்கும் எதிராக தமிழர் தேசமாக முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்- என்றனர். (ம-125,26)

## கரிநாள்...

தமிழாராய்ச்சி மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், ஆஸ்பத்திரி வீதி வழியாக கச்சேரியடியை வந்தடைந்து பின்னர் செம்மணியைச் சென்றடையும். செம்மணியிலிருந்து வாகனங்களில் பயணிக்கும் பேரணியானது நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து முதலாம் நாளினை இரணைமடுவில் நிறைவுசெய்து கொள்ளும்.

இரண்டாம் நாள் பேரணி பெப்ரவரி 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பரந்தனில் ஆரம்பமாகி வவுனியா மற்றும் மன்னார் அணிகளை இணைத்துக் கொண்டு முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு நோக்கிப் புறப்படும். செல்லும் வழியில் புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பைச் சென்றடையும். அங்கிருந்து முள்ளிவாய்க்கால்சென்று உறுதியெடுத்துக்கொண்டு முல்லைத் தீவைச் சென்றடைந்து அங்கு பேரணியின் இரண்டாம் நாள் நிறைவுபெறும்.

மூன்றாம் நாள் பெப்ரவரி 6ஆம் திகதி காலை 7.30 மணிக்கு முல்லைத் தீவிலிருந்து ஆரம்பமாகி திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடியூடாக திருகோணமலையை பி.ப. 1.30 மணியளவில் சென்றடையும். பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் வெருகலில் மூன்றாம் நாள் நிகழ்வினை நிறைவு செய்யும்.

நான்காம் நாள் பேரணி பெப்ரவரி 7ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு வெருகலிலிருந்து ஆரம்பமாகி வாகரை சென்று அங்கிருந்து மட்டுநகரை வந்தடையும் அதேநேரம் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் பேரெழுச்சியாக மக்கள் வந்து இணைந்து மாபெரும் பொதுக்கூட்டத்துடன் நிறைவுபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## அச்சுவேலியில்...

யிடப்பட்டுள்ளது. இதன்படி, அச்சுவேலியில் 148.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் பருத்தித்துறைப் பகுதியில் 140.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பன் பகுதியில் 131.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 128.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரிப் பகுதியில் 125.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 118.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரத்தில் 114.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 98.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவுப் பகுதியில் 75.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவுப் பகுதியில் 55.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகி உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-66)

## எகிறுகின்றது...

விக்கின்றனர். எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அல்லது அன்றையதினம் நள்ளிரவு முதல் இந்த விலைத் திருத்தம் இடம்பெறும் என நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு விலைச் சூத்திரத்தின் பிரகாரம் 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை 700 முதல் 800 ரூபா வரை அதிகரிக்க வேண்டியுள்ளது. ஆனால், லிட்ரோ நிறுவனம் இதன் விலையை 350 ரூபாவினால் மட்டுமே அதிகரிக்க தீர்மானித்துள்ளது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## கடனடிப்படையில்...

பான செலவுகளுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு, உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடும் வகையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கை என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

புதிய உத்தரவின் அடிப்படையில், கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்குதல், அச்சிடுதல் பணிகளை மேற்கொள்ளல், அரச உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற தேர்தல் ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளது. முன்பு நடந்த ஒவ்வொரு தேர்தலிலும், தேர்தல்கள் திணைக்களம் கடன் அடிப்படையில் பொருள்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்து, அதற்கான பணத்தை அவ்வப்போது விடுவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதி...

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மக்கள் ஆணையால் எமது கட்சிக்குக் கிடைக்கும் வெற்றியூடாகப் புரட்சியொன்றை ஏற்படுத்துவோம். அந்த மக்கள் ஆணையின் ஊடாக ரணிலின் ஜனாதிபதி கதிரையைப் பறிப்போம். தேர்தல் நடத்துவதற்குப் பணம் இல்லை என்றால் அரசாங்கம் ஆட்சியில் இருந்து விலக வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

இன்று அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் பொது எதிரியாக மாறியிருப்பது ஜே.வி.பி.தான்.

அதற்குக் காரணம் ஜே.வி.பி. வெற்றியை நோக்கி நகர்வதுதான். நான் கொழும்பு மாநகரசபையின் உறுப்பினராக இருந்திருக்கின்றேன். அதனால் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அடிமட்டத்தில் இருந்து பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு உள்ளூராட்சிசபைதான் ஒரே வழி.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றால் அரசியல் உறுதித் தன்மையை ஏற்படுத்த வேண்டும். அதற்கான முதலாவது வாய்ப்புதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல். இதை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். இந்தத் தேர்தலில் நல்லவர்களை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும். இந்தத் தேர்தல் கட்சிகளின் தேவையை விட மக்களின் தேவைக்காக வருகின்ற தேர்தல்' - என்றார். (ம-22)

## சுமந்திரன்....

நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சோ.சேனாதிராசா. அத்துடன் சுமந்திரன், தவராஜா ஆகியோரின் அண்மைக்கால அறிக்கை மோதல்கள் குறித்து தனது அதிருப்தியையும் வெளிப்படையாகவே தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஓர் அங்கத்துவக் கட்சியாக இருந்து எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஒரு புதிய அணுகுமுறையை பரிந்துரை செய்தது. வட்டார அடிப்படையிலும், விகிதாசார அடிப்படையிலும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் இந்தத் தேர்தலில் புதிய முறையொன்றை பரீட்சித்துப் பார்க்கவுள்ளோம். இந்த முடிவுக்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்ட போதிலும், தமிழரசுக் கட்சியின் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு ஏற்பவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

நாங்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொள்ளாமல் தேர்தலில் பெறுகின்ற ஆசனங்களின் அடிப்படையில், வடக்கு கிழக்கில் ஒன்றுபட்டு ஆட்சியமைப்பதே திட்டமாக இருந்தது. அதற்கேற்பவே எமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும். ஆனால், கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஏனைய கட்சிகளை மிகவும் தாழ்வாக விமர்சித்தல், முரண்பட்ட கருத்துக்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளில் அண்மைய நாள்களாக ஈடுபட்டிருக்கின்றனர். சுமந்திரன், தவராஜா ஆகியோரின் கருத்துக்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றால் எமது மக்களும் கட்சியின் தொண்டர்களும் வெளிப்படையாகவே அதிருப்தியடைந்து என்னிடம் பல முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர். இன்று காலையும் (நேற்றும்) இவ்வாறு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள மத்திய குழுக்கூட்டத்தில், ஏனைய கட்சிகளை விமர்சித்தவர்கள் மற்றும் கட்சிகளை பிளவுபடுத்தும் நோக்கில் செயற்பட்டவர்களுக்கு எதிராக நாம் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கவுள்ளோம். அவர்கள் யாராக இருந்தாலும் எந்தப் பதவிநிலைகளில் இருந்தாலும் நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன். இல்லாவிட்டால், எமது மக்களை பிரித்தாளுகின்ற, அரசியல் தீர்வுக்கான பயணத்துக்கு பின்னடைவை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளுக்கு துணைபோவதாக அது அமைந்துவிடும் - என்றார்.

இதேவேளை, கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்ற பின்னரும் கட்சிக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துக்களை வெளியிட்டமைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்தியகுழுவில் கோரப்பட்ட போதும், அவ்வாறான எதுவித நடவடிக்கையும் தமிழரசுக் கட்சியால் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 3
திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 12ஆவது பரிசளிப்பு விழா, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரியின் அதிபர் மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினராக 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தின் இயக்குனர் அருட்பணி ம.டேவிட் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14)



## போதையிலிருந்து மீண்டெழல் 'விழித்தெழு' நாடகம் ஆற்றுகை

யாழ்ப்பாணம், பெப். 3
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கூத்தாட்டு அவைக்குழாத்தினரது ' விழித்தெழு ' எனும் வீதி நாடகம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்திய கலாசார மத்திய நிலையத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது.
வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வேண்டுகோளுக்கமைய நாடகம் ஆற்றுகைப்படுத்தப்பட்டது.
மாணவர்கள் மற்றும் இளைய சமூகம் போதைப்பொருள் பாவனையிலிருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வர் என்பதனை மையமாகக் கொண்டு நெறிப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தில் கடமையாற்றும் நாடகவியலாளர் விஜயரூபன் நெறியாள்கையில் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது.
நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ராம் மகேஷ் உள்ளிட்ட இந்தியத்தூதரக அதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்குபற்றினர். (ச-23)


## மணப்பெண் தேவை

கௌரவகுலம் (V), இந்து, Australia Citizen .
பின்வரும் மாப்பிள்ளைகளுக்குப் பெண் தேவை.

01. மானிப்பாய் - நாவற்குழி. 1990. பூரட்டாதி. CPA, ACMA, CGMA. Masters of Commers, CIMA, business Administratiion Manager.
02. உசன் - கரவெட்டி. 1990. சதயம். Phd. Data Scienties
03. ஆனைப்பந்தி - மானிப்பாய். 1992. பூராடம். MBA, MEng(civil), civil Engnieer
04. கொக்குவில் - கந்தர்மடம். 1992. புனர்பூசம். Bachelor of Computer systerm Engineer.
05. புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம். 1992. விசாகம் BSc Civil Engineering , CIMA fully Qualified, Accountant
06. நயினாதீவு. 1992. அனுசம் Master of Engineering, Civil Engineer
07. சாவகச்சேரி - Jaffna Town. 1988. பூரட்டாதி BEng, Civil Engineer
08. Jaffna Town. 1988. அனுசம் B.Com, Degree, Accountant
09. மானிப்பாய் - கொக்குவில். 1984. சுவாதி. CIMA. IT Engineering, MBA, Business Analyst
10. யாழ்ப்பாணம். 1984. ரேவதி. Bachelor Of Information Technology
11. பருத்தித்துறை - யாழ்ப்பாணம். 1991. அனுசம். BSc, Engineering , Civil Engineer
12. மல்லாகம். 1985. பூரட்டாதி. Bacholar of Software Engineering (Australia) Software Engineer.
13. ஏழாலை - இணுவில். 1986. அச்சுவினி. IT Degree (Australia)
14. அரியாலை. 1982. ரேவதி. BEng (Hons). Engineer
15. மாவிட்டபுரம் - இணுவில். 1985. சதயம். Civil Engineering, Charted Accountant,

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
மல்லாகம் தரம் - 06 கொக்குவில்
தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## புலமைப்பரிசில் வகுப்புகள்

யாழ் நகரில்......
ஆசிரியர் என்.எஸ்.தீபன்
தரம் 04, 05
❖ IQ Classes ❖ Paper Classes
(சனி, ஞாயிறு தினங்களில்)
077 666 0749




## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், பெப்.3
தமிழ்ச் சைவப் பேரவையின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் பழைய தபாற்கந்தோர் வீதி, யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள அகில இலங்கை சைவமகா சபை அலுவலகத்தில் கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது தமிழ்ச் சைவப் பேரவையின் இந்த ஆண்டுக்கான தலைவராக முன்னாள் நீதிபதி இ.வசந்தசேனன், பொதுச் செயலாளராக த.சிவரூபன், பொருளாளராக மருத்துவர் தி.சுதர்மன், இணைச் செயலாளர்களாக யாழ். பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி.பொன்னுத்துரை சந்திரசேகரம், செல்வி.சோதிநாயகி அம்மையார் ஆகியோரும் பத்திராதிபராக ஏந்திரி சர்வராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ய-66)

## "அன்பே சிவம்" விருது பெறும் அறப்பணியாளர் நவரட்ணராசா

வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத் தர்மகர்த்தாவும் 'அருளகம்' சிறுவர் இல்லம் மற்றும் சிவன் முதியோர் இல்லத்தின் ஸ்தாபகருமான ஆறுமுகம் நவரட்ணராசாவுக்கு 'அன்பே சிவம்' விருது அகில இலங்கை சைவமகா சபையால் வழங்கப்படவுள்ளது.
விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலய காஞ்சி சிவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் நா.சண்முகரத்தினம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தி. திரேஷ்குமார் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)


### பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 072 6661

### தவறவிடப்பட்டது

சங்கானை மக்கள் வங்கிக்கும் Northern Hospital க்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 01.02.2023 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கும் 6.30 மணிக்கும் இடையில் தங்க பூட்டுக்காப்பு ஒன்று தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
T.P: 075 2175 521


## மரண அறிவித்தல்

தோற்றம்
24 • 02 • 1929



மறைவு
01 • 02 • 2023

### திருமதி துரைராசா கமலாம்பிகை

புங்குடுதீவு கிழக்கு, வீராமலை 10 ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி துரைராசா கமலாம்பிகை நேற்றுமுன்தினம் (01.02.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் ஆச்சிக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கந்தையா - தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைராசா அவர்களின் அன்பு மனைவியும், பாலேந்திரன் (திருநெல்வேலி), தெய்வேந்திரம் (சுவிஸ்), காலஞ்சென்ற மகேந்திரன் (பாரிஸ்), இந்திராணி (சுவிஸ்), தேவராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலட்சுமி (திருநெல்வேலி), ரஞ்சினி (சுவிஸ்), காலஞ்சென்ற கமலாசினி (பாரிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்), பரமேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை, மார்க்கண்டு, நடராசா, இராசலிங்கம், பேரின்பமணி ஆகியோரின் சகோதரியும், விமலாதேவி, காலஞ்சென்ற கௌரி, மாசில்லாமணி, காலஞ்சென்ற சுகிர்தாம்பாள், காலஞ்சென்ற சிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் புங்குடுதீவு மண்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22/6, சைவ பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தொடர்பு: 077 898 1460, 077 666 0223



...த்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org